

# கேர்ஷீல்டு லைஃப்

## உங்களைக் கவனித்துக்கொள்கிறோம், வாழ்நாள் முழுவதும்



## கேர்ஷீல்டு லைஃப் 4 வழிகளில் மேம்பட்ட பாதுகாப்பும் உறுதியும் அளிக்கும்

### 1 வாழ்நாள் முழுவதும் ரொக்கத் தொகை வழங்கீடுகள்

**நீங்கள் கடுமையான உடல் இயலாமையுடன்** அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கைகளில் குறைந்து 3 நடவடிக்கைகளைச் செய்ய இயலாதிருக்கும் வரையில் வழங்கீடு கிடைக்கும் (அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கைகள்: சாப்பிடுதல், குளித்தல், கழிவறையைப் பயன்படுத்துதல், ஆடை உடுத்திக்கொள்ளுதல், நடத்தல், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகர்தல்)

### 2 ஆரம்ப வழங்கீட்டுத் தொகை காலப்போக்கில் அதிகரிக்கும்

2020ல் மாதத்திற்கு **$600** எனத் தொடங்கும்



### 3 சந்தாத் தொகைகளைக் கட்டுப்படியாக்க அரசாங்க நிதி உதவிகள்

சந்தாவைச் செலுத்த இயலாத எவரும் காப்புறுதியை இழக்கமாட்டார்

### 4 சந்தாத் தொகை முழுவதும் **மெடிசேவ்** பயன்படுத்தி செலுத்தப்படலாம்

## 1980 இல் அல்லது அதற்குப் பிறகு பிறந்தவர்கள்

- எல்லாருக்கும் காப்புறுதி உண்டு – உங்களுக்கு ஏற்கனவே மருத்துவப் பிரச்சனைகள் அல்லது இயலாமைகள் இருந்தாலும் பாதுகாப்பு பெறுவீர்கள்
- நீங்கள் 1980க்கும் 1990க்கும் இடையில் பிறந்திருந்தால், 2020ல் தானாகவே கேர்ஷீல்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்
- நீங்கள் 1990க்குப் பிறகு பிறந்திருந்தால், 30 வயதை எட்டும்போது கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்வீர்கள்
- இடைக்கால நிதி உதவிகள் 2020 முதல் 2024 வரை கிடைக்கும்

## 1979 இல் அல்லது அதற்கு முன்பாகப் பிறந்தவர்கள்

- உங்களது தற்போதைய எல்டர்ஷீல்டு காப்புறுதித் திட்டம் உங்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பளிக்கும்
- உங்களுக்குக் கடுமையான உடல் இயலாமைகள் ஏதும் இல்லாவிட்டால், 2021ல் கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்ந்துகொள்ள முடிவுசெய்யலாம்
- நீங்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் சேர்ந்தால், $2,500 வரையிலான பங்கேற்பு ஊக்கத்தொகை கிடைக்கும்

**கேர்ஷீல்டு லைஃப் திட்டம் தவிர, சிங்கப்பூரர்களின் நன்மைக்காக 2020ல் இரு புதிய திட்டங்களும் தொடங்கப்படுகின்றன:**

| | |
|---|---|
| நீண்டகாலப் பராமரிப்புக்கு **மெடிசேவ்** | கடுமையான உடல் இயலாமைகள் உள்ளவர்கள் **மெடிசேவ்** சேமிப்பிலிருந்து மாதத்திற்கு **$200 வரை ரொக்கமாக எடுக்கலாம்** |
| **எல்டர்ஃபண்ட்** | கடுமையான உடல் இயலாமைகள் உள்ள குறைந்த வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்களுக்காக **எல்டர்ஃபண்ட்** தொடங்கப்படுகிறது. இத்திட்டம் மாதத்திற்கு **$250** வரை நிதி உதவி வழங்கும். |

மேல்விவரங்களுக்கு, அன்புகூர்ந்து **www.careshieldlife.sg** இணையத்தளத்தை நாடவும்
உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து **1800-222-3399** என்ற எண்ணில் மசேநி கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்

MINISTRY OF HEALTH
SINGAPORE